1993 மார்ச் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

க—தொடர்ச்சி.

(ரூபாய்
ஆயிரத்தில்.)

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை—தொடர்ச்சி.

61	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.	1,42,50,59
	பெருமொத்தம் ..	28,46,31,98

3. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1992–93, அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டிற்கான இறுதித்துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இந்த மன்றத்தின்முன் வைப்பதற்கு முன்னால், 1992–93 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளைப் பற்றிய ஆவணங்களும் உறுப்பினர்களுக்கு அவரவர்களுடைய அறைகளுக்கும், இல்லங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் கூறிவிட்டு, நான் என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

1992-93 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் முன் வைக்கிறேன். இத்துணை மதிப்பீடுகளில் ரூ. 1,355.80 கோடி வருவாய்க்கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ. 260.33 கோடி மூலதன, கடன் கணக்கிலும் அடங்கும்.

இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டங்கள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேரவேண்டிய வழிவகை முன்பணங்கள், வட்டி, நிலையான கடன்களின் ஒரு பகுதி ஆகியவற்றைச் சரிக்கட்டல் செய்வதற்காக, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பாக ''மானியக் கோரிக்கை எண் 20. வேளாண்மை'' என்ற தலைப்பின் கீழ் ரூ 464.68 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சரிக்கட்டலுடன், 1992-93 ஆம் ஆண்டு முடிவில் உள்ளபடி, தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சேரவேண்டிய மொத்த உதவித் தொகையும் கொடுத்துத் தீர்க்கப்படும்.

உழவர்களுக்கு இரசாயன உர உதவித் தொகை வழங்குவதற்காக '' மானியக் கோரிக்கை எண் 20. வேளாண்மை '' என்பதன்கீழ் ரூ. 34.32 கோடி மற்றும் ரூ. 13.99 கோடி நிதியொதுக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

உணவு தானியங்கள் வாங்குவதற்காக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வழிவகை முன்பணங்களை மாற்றுவதன் மூலம், '' மானியக் கோரிக்கை எண். 35. நுகர் பொருள் வழங்கல் '' என்பதன் கீழ் உதவித் தொகை வழங்குவது தொடர்பாக ரூ. 112.45 கோடி சேர்க்கப் பட்டுள்ளது. பொது வநியோக முறையின் கீழ் உணவு தானியங்களை வாங்கி, வழங்குவதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உதவி மானியங்கள் தொடர்பாக இந்த மானியக் கோரிக்கையில் ரூ. 17.65 கோடி கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், கொள்முதல் நடவடிக்கைகளுக்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட ரொக்கக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக, அக்கழகத்திற்கு உதவித்தொகை வழங்குவது தொடர்பாக இந்த மானியக் கோரிக்கையில் ரூ. 44 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளிடமிருந்து வரவேண்டிய கடன் தொகைகள் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதியுதவி-அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குச் (TUFIDCO) செலுத்தத் தக்கதாகச் செய்யலாமென்று அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கிணங்க, இந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில், '' மானியக் கோரிக்கை எண் 62. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் '' என்பதன்கீழ் ரூ. 83 கோடி சேர்க்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதற்காகப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குக் கடன்கள் வழங்குவதற்காக ரூ. 32.49 கோடி தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-20

வறட்சி நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்த, '' மானியக் கோரிக்கை எண். 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு '' என்பதன கீழ் ரூ. 9·19 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 100.75 கோடி தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

தனியார் தொடக்கப் பள்ளிகளில் புதிதாக அனுமதிக்கப்பட்ட பதவி இடங்களுக்காகவும், தற்போதுள்ள மான்ய உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளின் பணியாளர்களின் சம்பள உயர்விற்காகவும் மானியம் வழங்க '' மானியக் கோரிக்கை எண் 17. கல்வி '' என்பதன் கீழ் கூடுதல் ஒதுக்கீடு ரூ. 24.90 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. பேருந்துகளில் மாணவர்களுக்குப் பயணச் சலுகை

அளித்ததற்குப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இச்செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக இந்த மானியக் கோரிக்கையில் கூடுதலாக ரூ. 10.50 கோடி தொகையும் கோரப் பட்டுள்ளது.

அங்காடி மேம்பாட்டு நிதியுதவிக்கான திட்டத்தின் கீழ் மானியங்கள் வழங்குவதற்காக, '' மானியத் கோரிக்கை எண் 26. கைத்தறியும் துணித்தொழிலும் '' என்பதன் கீழ் ரூ. 6.86 கோடிக்குக் கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, '' மானியக் கோரிக்கை எண் 28. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் '' என்பதன் கீழ் ரூ. 4 கோடி கோரப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்களுக்கான காங்கிரீட் வீடுகள் கட்டும் திட்டத்திற்காக, '' மானியக் கோரிக்கை எண் 31. பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் '' என்பதன் கீழ், ரூ. 8.76 கோடிக்கு கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஆதி திராவிடர்களுக்கானப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்த, இந்த மானியக் கோரிக்கையில் கூடுதலாக ரூ. 12.18 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனத்திற்கு வட்டி செலுத்துவதற்சாகத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத் திற்கு உதவித் தொகை வழங்குவதற்கு, '' மானியக் கோரிக்கை எண் 33. வீட்டுவசதி '' என்பதன் கீழ் ரூ. 2.70 கோடிக்கு நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை நிறுவுவதற்காக, '' மானியக் கோரிக்கை எண் 48. ஊரகத் தொழில்கள் '' என் பதன் கீழ் ரூ. 3 கோடி கூடுதல் ஒதுக்கீடு சேர்க்கப்பட்டுள்ளது. கங்கை கொண்டான், பெருந்துறை வளர்ச்சி மையங்களில் தொழில் அடிப்படை வசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணி களுக்காகத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு (TACID) நிதியுதவி வழங்குவதற்காக, இந்த மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2.50 கோடி தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செல வினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித் தும் உரிய முழு விவரங்களும் பேரவையின்முன் வைக்கப்பட வேண்டியது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்

படுமென்று நான் கூறியதற்கு இணங்க விரிவாக அவற்றில் இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடு களை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

4. வரவு-செலவுத் திட்டம்—1993-94, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற் கான வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலுரை-தொடர்ச்சி, மாண்புமிகு நிதியமைச்சர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவன் என்கிற முறையில் இந்த பொது விவாதத்தில் எதிர்க்கட்சியின் கருத்துக்களைத் தொகுத்து எடுத்துச் சொல்லு கின்ற கடமை எனக்கு உண்டு. எனவே, கருத்துக்களைத் தொகுத்து எடுத்துச் சொல்வதற்கு அனுமதியளிக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். அத்தகைய கடமை உங்களுக்கு இருக் கிறது என்றுதான் வெள்ளிக்கிழமை தாங்கள் பேசுவதற்காக நேரம் ஒதுக்கப்பட்டு, அந்த வாய்ப்பைத் தாங்கள் பயன்படுத்துவீர்கள் என்று நான் இருந்தேன். ஆனால் நீங்கள் அவையைப் புறக்கணிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வெளியே சென்றதற்குப் பிறகு ஏனைய எதிர்க் கட்சித் தலைவர்கள் அனை வரும் பேசிமுடித்து நிதியமைச்சர் அவர்களும் பதில் உரை அன் றைக்கே தொடங்கி, அதனுடைய தொடர்ச்சியை இன்றைக்குத் தொடர்வதற்கு அவருக்கு வாய்ப்பு அளிப்பதாக அன்றைக்கு, நான் அறிவித்திருக்கிறேன். எனவே, அந்த வாய்ப்பு வழங்கப் பட்ட அன்றைக்கு நீங்கள் பயன்படுத்தாததை மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் இன்றைக்கு பதில் உரை வழங்கிக் கொண் டிருக்கிறபோது நீங்கள் கேட்பது, என்னைப் பொறுத்த மட்டில் நியாயம் இல்லையென்றே நான் கருதுகிறேன். எனவே, ஏற் கனவே அவர் பதில் தொடங்கி, இன்று பதில் பாதியில் நிற் கிறது. அந்தப் பாதிக்குரிய வாய்ப்புதான் இன்றைக்கு அவருக்கு வழங்கப்பட்டு, அதற்காகத்தான் கேள்வி நேரம் இன்றைக்கு ரத்து செய்யப்பட்டு அந்த நேரத்தை அவருக்கு வழங்கியிருந்தேன்.